தினத்தந்தி
DAILY THANTHI
பவள விழா ஆண்டு

15 – 12 - 2021

# வருமான வரித்துறை முதன்மை தலைமை கமிஷனராக கீதா ரவிச்சந்திரன் பொறுப்பு ஏற்பு

## சென்னை கல்லூரியில் படித்தவர்


கீதா ரவிச்சந்திரன்

சென்னை, டிச.16-

வருமான வரித்துறையின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் முதன்மை தலைமை கமிஷனராக கீதா ரவிச்சந்திரன் நேற்று பொறுப்பு ஏற்றார்.

இவர் இந்திய வருவாய் பணியில் 1987-ம் ஆண்டு சேர்ந்தார். தேசிய நேர்முக வரிகள் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று, சென்னை, மும்பை, நாக்பூர், பெங்களூரு மற்றும் நாட்டின் பல்வேறு இடங்களில் கீதா ரவிச்சந்திரன் பணியாற்றி இருக்கிறார்.

இவருடைய 34 ஆண்டுகள் நீண்ட அலுவலக பணியில் பல முக்கிய பொறுப்புகளை வகித்திருக்கிறார். கீதா ரவிச்சந்திரன் சென்னையில் ஸ்டெல்லா மாரீஸ் கல்லூரியில் படித்தவர். கலை, இலக்கியம் மற்றும் இசைத்துறையில் கீதா ரவிச்சந்திரன் மிகுந்த நாட்டம் உள்ளவர்.